விடை—

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொட்டாயமேடு பாலர் பள்ளிக்குக் கட்டடம் கட்டிக்கொடுக்க நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லாததால் கட்டடம் கட்டிக் கொடுக்க இயலாது.

50—

தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல்

வினா எண் 52986—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்: *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆண்டிமடம் தொகுதியில் உள்ள கு. வல்லம், இலையூர் தெரு, தாவடநல்லூர், புக்குழி ஆகிய இடங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், கு. வல்லம் கிராமத்தில் இதுவரை 40 தொகுப்பு வீடுகளும், இலையூர் கிராமத்தில் இதுவரை 32 தொகுப்பு வீடுகளும், தாவடநல்லூர் கிராமத்தில் இதுவரை 30 தொகுப்பு வீடுகளும், புக்குழி கிராமத்தில் இதுவரை 52 தொகுப்பு வீடுகளும், ஆதிதிராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 2003-2004 ஆம் நிதியாண்டில் கு. வல்லம் கிராமத்தில் 10 தொகுப்பு வீடுகள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பம் மீனவர்கள் அடுக்குமாடிக் குடியிருப்பு பழுதடைந்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பம் மீனவர்கள் குடியிருந்து வரும் அடுக்குமாடி குடியிருப்பு முற்றிலுமாகப் பழுதடைந்து உள்ளது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. த. ஆறுமுகம் அவர்கள், சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அறிவிப்பு கொடுத்து இருக்கிறார்கள். அது குறித்து சுருக்கமாகப் பேச அவர்களை அழைக்கிறேன். திரு. த. ஆறுமுகம். (குறுக்கீடு)*

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குப் பாதுகாப்பு....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. (குறுக்கீடு) திரு. த. ஆறுமுகம். (குறுக்கீடு)*

திரு. ஜி.கே. மணி: *ஒரு சட்டமன்ற உறுப்பினர் பற்றிய பிரச்சினை. (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மணி அவர்களே, அவையெல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. என்னுடைய அறைக்கு வந்து கேளுங்கள். (குறுக்கீடு) தாங்கள் கொடுத்திருக்கிற எல்லாத் தீர்மானங்களும் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. அவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.*

2. சிறப்புக் கவன ஈர்ப்பு-*தொடர்ச்சி*

திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பம் மீனவர்கள் அடுக்குமாடிக் குடியிருப்பு பழுதடைந்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஆறுமுகம், பேசுங்கள்.*

முற்பகல் 11-40

திரு. த. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு*

என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பம் மீனவ கிராமத்திற்கு 492 அடுக்குமாடி குடியிருப்புகள் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டன. அக்கட்டடங்கள் முற்றிலுமாக பழுதடைந்து, மீனவர்கள் பயன்படுத்த முடியாத நிலைமையில் உள்ளன. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேயும் அவர்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள காரணத்தினாலே சொத்து வரியில் விலக்களிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது என்ற ஒரே காரணத்தினாலே கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்தக் கட்டடங்களைப் பராமரிக்கும் பணியை அவர்கள் மேற்கொள்ளவில்லை. மேலும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு சலுகைகளை மீனவர்களுக்கு அளித்து வருகின்ற நிலையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவுடன் இதனைப் பரிசீலனை செய்து, அதிக நிதி ஒதுக்கீடு செய்து, உடனடியாக அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் புதுப்பிக்க வேண்டுமெனக் கேட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, எண்ணூர் நெடுஞ்சாலை போடப்பட்டபோது திருச்சினாங்குப்பத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 492 அடுக்குமாடி வீடுகளைக் கட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையின் 18-12-1992 ஆம் நாளிட்ட அரசாணை எண் 417-ல் ரூ.2.37 கோடிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 1991-96 ஆட்சியில் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இப்பணி ஜனவரி 1993 இல் தொடங்கப்பட்டு, செப்டம்பர் 1994 இல் முடிக்கப்பட்டது. 210 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடுகள் 1994 இல் கட்டி முடிக்கப்பட்டு, மீனவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. பெரும்பாலான மீனவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளதால் வீடுகளுக்கான சொத்து வரிக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விலக்களிப்பு செய்தார்கள். சாலை, தெரு விளக்குகள் மற்றும் கழிவுநீர்க் குழாய்களின் பராமரிப்பு, திருவொற்றியூர் நகராட்சியிடம் 11-11-1997 ஆம் நாளிட்ட மீன்வளத் துறை இயக்குநரின் கடித எண் 65855/சி1/1996 வழியாக ஒப்படைக்கப்பட்டது.